1983 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அந்த வகையிலே ஒட்டு மொத்தமாக பயிர் பாதுகாப்பு நடவடிக்கை என்று மேற்கொண்டிருக்கிறோம். 1982—83-ல் பருந்துறைப் பகுதியைப் பொறுத்த வரை 500 ஏக்கருக்கு நாம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அதில் மானியம் ரூ. 20 ஆயிரம், கடன் ரூ. 20 ஆயிரம் தர இருக்கிறோம்.

சென்னை நகரில் நடை பாதையில் கட்டப்பட்டுள்ள கோயில்கள்.

*வினா எண். 49—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அண்மைக்காலத்தில் நடை பாதைக் கோயில்கள் ஏராளமாகப் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது அரசின் கவனத்துக்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில் இதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) 7 கோயில்கள் நடை பாதையில் கட்டப்பட்டுள்ளன. அவைகளை நீக்க மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மக்கள் தொகை பெருகிக் கொண்டு வருகிறது. அதனால் எல்லாச் சாலைகளிலும் போக்குவரத்து நெரிச்சல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நடைபாதை கோயில்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. இந்த நடைப்பாதை கோயில்கள் ஏற்படுவதைத் தடுக்க அல்லது வேறு இடங்களில் மாற்றுவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் உள்ளதா? அதேபோல் போக்குவரத்து நெரிச்சல் உள்ள இடங்களில் எங்கு பார்த்தாலும் எல்லா சாலைச் சந்திப்புகளிலும் அரசியல் கட்சிகளின் கொடிக் கம்பங்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் போக்குவரத்து நெரிச்சல் ஏற்படுகிறது. அதையும் கவனித்து போக்குவரத்து நெரிச்சல் ஏற்படாத வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நடை பாதை கோயில்களுக்கு மாற்று வழிமுறைகள் அல்லது வேறு இடங்களில் ஏற்படுத்தும் திட்டம் மாநகராட்சியின் பரிசீலனையில் இல்லை. பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் கோயில்கள் இருக்கவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். இந்த அரசைப் பொறுத்தவரையில் கோயில்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதுதான் நம்முடைய

[1983 ஜனவரி 29

எண்ணம் எல்லாம். சமூகவிரோதிகள் நடமாடும் இடமாக கோயில்கள் அமைந்துவிடக்கூடாது என்பதுதான்அரசின் எண்ணம். கோயில்கள் கட்டப்பட வேண்டும் என்றால் மாநகராட்சிக்கு விண்ணப்பம் அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடபழனி கோயிலில் நடைபெற்ற அக்கிரமங்களை எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை போன்ற பத்திரிக்கைகளில் கடுமையாக தாக்கி யிருப்பது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நடை பாதை கோயில்களைப் பற்றி. அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: இந்த யோசனையை அமைச்சர் அவர்களுக்கு சொல்லியிருந்தால் உள்ளபடியே நன்றாக இருந்து இருக்கும். மின்சார தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில் அப்படிப்பட்ட நடை பாதை கோயில்களில் ஆடி மாத விழா மற்றும் பல விழாக்களின் போது அலங்கார விளக்குகளைப் போடு கிறார்கள். அதனால் மின்சார தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே கோயில்களில் மின்சாரம் இப்படி பயன்படுத்துவதை தடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? நடை பாதை கோயில்களை போக்குவரத்து நெரிசல் இல்லாத இடங் களுக்கு மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் சொன்னது பால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சலாக இருக்கக்கூடிய கோயில்களை அப்புறப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இதுவரை மாநகராட்சியைப் பொறுத்த வரை வடசென்னையில் 302 நடை பாதை கோயில்கள் இருக் கின்றன. தென்சென்னையில் 164 கோயில்கள் இருக்கின்றன. அண்மையில் 7 கோயில்கள் கட்டப்பட்டன. அதில் 4 கோயில்கள் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்ட கோயில்களில் ஒன்று மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது. 2 கோயில்களை இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 1 கோயிலை இடிக்கக்கூடாது என்று கோர்ட்டுக்கு சென்றிருக்கிறார்கள். தடை வாங்கியிருக் கிறார்கள். ஆகவே அருமை நண்பர் புருஷோத்தமன் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கட்சிகள் யாராக இருந்தாலும், நடைப்பாதை கோயில்கள் ஏற்படுவதில் அது பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு ஒத்துழைப்பு

1983 ஜனவரி 29]

கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக எந்தக் கட்சியாக இருந்தாலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க., தி.மு.க., இந்திரா காங்கிரஸ் போன்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் கொடிக்கம்பங்களை ஏற்படுத்தும்போது அது பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படாத வகையில் அவர்கள் இந்த மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது கோயில்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல இந்த அரசின் கொள்கை என்று சொன்னார்கள். கோயில்கள் இருக்கட்டும். இந்தப் பிரச்சனை சென்னையில் மட்டும் இல்லை, பல இடங்களில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் மக்களுடைய சுமுகமான வாழ்க்கையை பாதித்து வருகிறது. கோயில்களை அவரவர்கள் சொந்த இடங்களில், வேண்டுமானால் கட்டிக்கொண்டு போகட்டும். பொது இடங்களில், அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் யாரும் கோயில்கள் கட்டக்கூடாது என்று கடுமையான உத்திரவை அரசு போடுமா என்பதை நான் சீரியஸாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. சட்ட நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும். அதற்கு ஏற்றவாறு சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் சட்டத்தை மீறுகிறவர்களை எத்தனை நாளுக்கு நாம் தடுக்க முடியும்? கூடுமான அளவுக்கு நாம் தடுத்து வருகிறோம். அதையும் மீறி ஆக்கிரமிப்புகள் செய்கின்ற நேரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவிர்க்கப்படவேண்டிய இடங்களில் தவிர்க்கப்படுகிறது. தவிர்க்க முடியாத அந்த வகையில் ஒரு சில கோயில்கள் வந்துவிடுகின்றன, ஆகவேதான் அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தால்தான் இந்த நிலைமைகளை எல்லாம் சீராக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டுமல்லாமல் பல நகராட்சி, பெரு நகராட்சி பகுதிகளிலே நடைபாதை கோயில்கள் என்று மட்டுமல்லாமல், நடைபாதையின் நடுவிலேகூட கோயில்கள் ஏராளமாக புதிதாக அல்ல—எல்லாம் பழையதாகவேகட்டப்பட்டு அவை இன்னும் இருந்து கொண்டு இருப்பதை அரசு அறியுமா? அவைகளை அகற்ற ஆவன செய்ய அண்ணாவின் வழிவந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மாநகராட்சியைப் பொறுத்தது. நகராட்சிகளைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் கண்டிப்பாகப் பதில் சொல்லப்படும்.